உ
சிவமயம்

# ஸ்ரீ முத்து மாரியம்மன் வரலாறு.



வெளியீடு:

திரு. சு. விசுவநாதன் நடராஜ்
சைவ சித்தாந்தப் பண்டிதர்.

விலை 1 ரூபா.

N° 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ முத்து மாரியம்மன் வரலாறு.



வெளியீடு:

திரு. சு. விசுவநாதன் நடராஜ்

சைவ சித்தாந்தப் பண்டிதர்.

விலை 1 ரூபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சிந்தாந்தப் பண்டிதர் திரு. வி. நடராசா அவர்கள் என் பாடசாலை நண்பர். பாடசாலை நாட்களில் தமிழ் இலக்கியங்கள், சமய ஆராய்ச்சிகள், நாடகத்துறை இவற்றிலெல்லாம் மிகுந்த ஈடுபாடுடையவர். இனிய குரலும், எடுத்துக்கொண்ட பொருளை மற்றோர் மனதில் ஆழப்பதிக்கும் ஆற்றலும் வாய்ந்தவர்.

எம். கே. தியாகராஜபாகவதர் பெயர் அக்காலத்தில் தெரியாதோர் இல்லை. எவ்வித வித்தியாசமுமின்றி திரு. எம். கே. தியாகராஜபாகவதர் போல் இனிமையாக பாடும் வல்லவர். "ஈழத்து" தியாகராஜபாகவதர் என்று அக்காலத்தில் அவருடன் படித்தோம். அவரை படிப்பித்த ஆசிரியரும் பாராட்டுவதுண்டு.

சமயப்பணியும், கோயில் திருப்பணியும் செய்து மிகப்பிரபலம் வாய்ந்தவராக விளங்கிய சோதிடர் திரு. சு. விசுவநாதன் அவர்கள் மூத்த மகன் இவர் பரம்பரை பரம்பரையாக குடும்பத்தில் படிந்து வந்த கலைத்திறனும், கவிபாடும் ஆற்றலும் திரு. வி. நடராசா அவர்களுக்கு கைவந்த கலையாகும். இயற்கையாக இன் கவிகள் பாடும் இவர் மாரியம்மன் மீது பாடியுள்ள பாடல்கள் பக்திரசம் மிகுந்தவை. இப்பாடல்கள் பாடப்பாட இனிப்பவை மட்டுமல்ல அம்மனின் அருள் பெறும் நல் மலர்கள். காலம் கடந்தும் நிற்கும் கவிமலர்கள். காலத்தால் இவை அழியாதவை.

இலங்கையெங்கும் சமயப் பேச்சு மேடைகளிலும், கதாப்பிரசங்கங்களிலும் பிரபல்யம் வாய்ந்தவர். இலங்கை வானொலியில் இவர் குரல் நாம் அடிக்கடி கேட்கலாம். சைவசித்தாந்தப் பண்டிதர் திரு. வி. நடராசா அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து சமயத்திற்கும், தமிழுக்கும் இறவாத புகழுடைய நூல்கள் பல ஆக்கித் தரவேண்டுமென்று ஆசி கூறுகின்றேன்.

அன்பன்,

*செ. இராசதுரை*

பாராளுமன்ற உறுப்பினர்.

தமிழகம்,
மட்டக்களப்பு.
15-6-69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்கள் பேரிற் பாடப்பட்ட காவியங்களில் ஆசிரியர் திரு. வி. நடராசா அவர்கள் யாத்துள்ள மாரியம்மன் காவியம் படிப்போர் மனதிற் பசுமரத்தாணிபோற் பதியக் கூடியதாய் சொல் நயம் பொருள் நயம்மிக்க முத்துக்கோவை என்று சொன்னாலது மிகையாகாது.

திரு. வி. நடராசா தமிழ் இலக்கியம் கர்நாடக சங்கீதம் சைவ சித்தாந்தம் என்பவற்றில் ஆற்றலும் அறிவும், நீண்டகால அனுபவமுமுடையவர். சிறு வயது தொடக்கம் கடந்த *30* வருடமாக இத்துறைகளில் அவர் காட்டி வந்த சிரத்தையே இக்காவியமாக உருவெடுத்துள்ளது. பாடிச் சுவைத்து பக்திப் பரவசமடையச் செய்யு மிக்காவியம் போற்றற்குரிய ஆக்க வேலையாகும். இவரது இப்பெரு முயற்சி இன்னும் பல காவியங்களுக்கு முன்னோடியாக அமைந்து விளங்க வேண்டி மாரி அம்மனைப் பிரார்த்தித்து எனது இதயபூர்வமான ஆசியைப் பெருமகிழ்வுடன் கூறுகின்றேன்.

*பி. வீ. கணபதிப்பிள்ளை,*
அதிபர் அரசடி மாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர் நடராசா அவர்கள் ஒரு புதிய கோணத்தில் அம்மன் காவியம் கண்டுள்ளார். பல கால சமய, சாத்திரப் பணிகளில் ஊறி விட்ட உதிரம் ஓடுபவர். அன்னார் குலமுறையான தமிழ் ஆர்வம் மிக்க சமயச் சார்பு உடையவர்.

காவியத்தின் பல இடங்களில் வரலாறு வண்ணப்பாய் விரித்து உணர்ச்சி ஊஞ்சலை தமிழ் தென்றலுடன் ஆட்டுகின்றது.

காப்பியங்களையும் கவின்மிகு பாட்டுக்களையும் தெம்மாங்கையும் மறந்து சினிமாப் பாட்டுக்களில் சமயம் வளர்ப்பவர்கள் செம்மையுற சைவமும் தமிழும் தழைக்க முட்டைக்குள் இரண்டு கரு. ஒன்று மொழி அடுத்தது சமயம் மொழி சமயத்தை வளர்க்கிறது சமயம் மொழியால் வளக்கிறது அன்பர் M. ராசா மொழிகாத்து சமயம் காக்க செய்யும் இக்காவியத் தொண்டு சிறப்பாக நமது மத்தியில் சதாவரவேண்டும் அதை நாம் நமது இல்லங்களில் ஏற்று இதயங்களில் ஏந்தி அன்னாருக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

இப்படிக்கு

*முகில் அழகன்*

*16-6-69.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை.

மட்டக்களப்புத் தாண்டவன்வெளியில் நீண்ட காலம் சமயப் பணி செய்த பிரபல சோதிடர் திரு. சுப்பிரமணியம் விசுவநாதன் என்பவரின் மூத்தமகன் திரு. வி. நடராசா அவர்கள் எனது மாண வனுவர்.

பாடசாலையில் கல்வி கற்கும் நேரத்தில் சமய அறிவிலும், கல்வி யிலும், சங்கீதத்திலும் விளையாட்டிலும், இலக்கிய ஆராய்ச்சியிலும், நாட கங்கள் எழுதி நடிப்பதிலும் மிகவும் உன்னத நிலையிலிருந்து அரசடி மாவித்தியாலய வளர்ச்சிக்குப் பாடுபட்ட மாணவனுவர். அவர் தற்போது இலங்கையின் பல பாகங்களிலும் சென்று கதாப்பிரசங்கம் சமயப் பேச்சுகள் நடத்தி நம் நாட்டுக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொண் டிருக்கிறுர். அவரை அறியாதவர் நம் நாட்டிலில்லை எனலாம்.

சுவாமி விபுலானந்தருக்கும் வித்துவான் சரவணமுத்துவுக்கும் நெருங்கிய உறவினரானவர். இவர் சைவ சித்தாந்தப் பண்டிதப் பட் டத்தை 1958ம் ஆண்டு பெற்றவர். இப்போ ஸ்ரீ முத்துமாரியம்மன் வரலாறு பற்றி இப்புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

சமய தத்துவ உண்மைகளையும், அம்மாளின் வரலாற்றுப் பாக்களையும் மிகமிகத் திறம்பட எழுதியுள்ளார். எனவே இவ்வாருன கலைஞர் பல்லாண்டு வாழ்ந்து இன்னும் அனேக நூல்களை வெளி யிட்டுச் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டுசெய்து வாழவேண்டு மென்று குருஎன்ற முறையில் ஆசி கூறுகின்றேன்.

வணக்கம்

*தொ. க. ஏரம்பமூர்த்தி,*
*அதிபர், செட்டிபாளைய மாவித்தியாலயம்*
*மட்டக்களப்பு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல. 6, அருணகிரி வீதி,
பவானி
கோட்டைமுனை. மட்டக்களப்பு.

# ஆசிரியர் முகவுரை.

அன்புடையீர்!

வணக்கம்

எமது தந்தையார் மட்டக்களப்பில் பிரபல் சோதிடர் திரு. சுப்பிரமணியம் விசுவநாதன் அவர்கள் கடந்த 50 ஆண்டுகளாகப் பூசகராகச் சில ஆலயங்களில் சைவப்பணி செய்த தொண்டினை ஞாபகப்படுத்தும் முகமாக இந்நூல் உதயமாகின்றது.

மேலும் ஸ்ரீ மாரியம்மனின் வரலாறு பற்றிப் பொது மக்கள் சிலருக்கு விளக்கமின்மையிருப்பதாலும், அம்மனின் மேல் பாடப்பட்ட சிந்துகள், கப்பற்பாட்டுகள், விருத்தங்கள் ஆகியவைகளைச் சைவமக்கள் நன்கு அறியவேண்டுமென விரும்பி இந்நூலை வெளியிடுகின்றேன். பிழைகளிருந்தால் எமக்கு அறிவியுங்கள். அதையான் மனப்பூர்வமாயேற்று எமது அடுத்த பிரதிகளில் திருத்திக் கொள்ளுவேன்.

வணக்கம்

இப்படிக்கு

**விசுவநாதன் நடராஜ்**

(சைவ சித்தாந்தப் பண்டிதர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடய விரி

விநாயக வணக்கம்

முருக வணக்கம்

கலைமகள் வணக்கம்

சக்தி வணக்க வரலாற்றுச் சுருக்கம்

மாரியம்மன் உற்பத்தி

மயனின் கப்பலின் பெருமை

மாரியம்மனும் பாண்டியனும்

கண்ணகியே மாரியம்மன்

ரேணுகையே மாரியம்மன்

மாரியம்மன் சிந்து

" விருத்தம்

" சிந்து

" விருத்தம்

" சிந்து

" விருத்தம்

மாரியம்மன் கப்பற் பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன் தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## முருக வணக்கம்

இறவாமல் பிறவாமல் எனையாழ் சற்குருவாகி
பிரவாசித்திறமான பெருவாழ்வைத்தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே

## கலைமகள் வணக்கம்

தோர்பிர்யுக்தா சதுர்பி;
ஸ்படிகமணி மயிம சஷமாலாம் ததாணு
ஹஸ்தேனை கேனபத்மம் ஸிதமபி சபுகம் புஸ்தகம் சாபரேண!
பாஸாகுந்தேந்து பங்க ஸ்படிகமணி நிபா பாஸமாணு ஸமாணு
ஸாமே வாக் தேவதேயம் நிவஸது வதனே ஸர்வதா
ஸுப்ரஸன்ணு!

## *சக்தி வணக்க வரலாற்றுச் சுருக்கம்*

கிழக்கு மாகாணத்திலே சக்தி வழிபாடு அநேகமாயுண்டு. ஆலயங்களும் அநேகம். ஆனால் ஏனைய மாகாணங்களில் குறைவு. இதன் காரணமென்னவென ஆராயின் சேர நாட்டுமக்கள் ஆதியில இங்கு குடியேறினர் என்பதற்குப் போதிய சான்றுண்டு.

கன்னக்குடுமி - மந்திர உச்சாரணம் - வெள்ளிப்பிரம்பு - உடுக்கு சங்கதமாடல் - போன்றவைகளும், மாமன் மகளை மணக்கும் வழக்கமும் சேரநாட்டிலிருந்திருக்கின்றது. இவ்வழக்கம் கிழக்கு மாகாணத்திலிருந் தமையால் சேர நாட்டாரே இங்குள்ளவரின் வம்சத்தவரென்பதற்கு வேறு அத்தாட்சி தேவையில்லை.

## *மாரியம்மன் உற்பத்தி*

சிவனின் இடப்பாகத்தைக் கொண்ட உமாதேவி தவம் செய்ய நினைத்து, அக்கினியை வளர்த்தாள். ஏழு கும்பங்களையுண்டாக்கினாள். கும்பங்களின்மேல் இரு எழுத்தாணிகளை நிறுத்தினாள் பின் சிவசாமி யார் தமது மெல்லிய பாதங்களை எழுத்தாணியின்மேல் வைத்துச் சிவனை நினைத்து கடுந்தவஞ் செய்தார், அம்மையாரின் யாக அவியைத் தேவர்கள் தாங்கமுடியாது அல்லல்பட்டுச் சிவனிடம்போய் முறையிட் டனர். உடனே சிவன் பார்வதியின் தவநிலையைககாண விருபபி பூத கணங்கள் சூழ, நாரதர் தேவகானம் பாட, நந்திமத்தளம் கொட்ட வேதியர் மறைகளோத, கற்பகப் பூமாரி பொழிய, பச்சைநிற மாயன் தாளம்போட தேவகன்னிகள் கர்ப்பூர ஆலாத்தியெடுக்க கலியுகப் பெருமானாகிய முருகப்பெருமான் முன்னேசெல்ல உமையின் முன் எம்பெருமான் காட்சி கொடுத்தார்,

உடனே அம்மையாரெழுந்து பெருமானின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள். சிவன் அம்மையே தங்களின் கடுந்தவத்திற்குக் கார ணமென்ன என வினவ, பெருமானே நான் எறிந்து விளையாடுவதற்கு முத்துவரம் வேண்டுமென்றார். அப்போது சிவன் நீ கேட்டபடி வரம் தந்தேன். ஆனால் இம்முத்தை மேதினியில் சென்று எறிந்து விளை யாடு என்றார், ஆனால் அம்மையாரோ இதைப் பரீட்சித்துப் பார்க்க எண்ணிச் சிவன்மேல் அம்முத்துக்களை எறிந்தாள்.

ஏகாம்பரக் கடவுளின் மேனியில் முத்துக்கள் பட்டவுடனே அது வடவாக்கினிபோல் அகோரத்தை உண்டாக்கியது. உடனே அம் மையார் அவர்பாதத்தில் வீழ்ந்து வணங்கி அழுது புலம்பி தான்செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபசாரத்தை மன்னிக்கும்படி வேண்டினர், பின் வேப்பிலை கொண்டு அவர் மேனியில் தடவி அகோரத்தைக் குறைத்தார், உடனே சிவன் புன்னகை செய்து பெண்ணே உமது பரீட்சையை முடித்து விட்டாய் ஆனால் தேவர்கட்கும் மானிடர்க்கும் முத்தெறியும் வகையைக் கூறு வேன் கேட்பாயாக என்று சொல்லத் தொடங்கினர்.

" நீதி தவறுதுலகை யரசாளும் மன்னர்கள்
பரைவாதம் பூசைசெய்வோர் — பாலகர்
விருத்தர், மறைகளை ஆராய்ந்தறிந்த அறிஞர்
கற்புப் பெண்டீர்.

*இவர்களைத் தவிர்த்து*

சதிகேடர் - துர்ச்சனர்கள் - சண்டாளர் பாதகர் - துட்டர்-கபடர் துன்மதிசூழ் வஞ்சகர்கள் வட்டிக்கு வட்டியிட்டு வாங்கும் மகாபாவிகள் கோளுரைப்போர், ஊர்க்கலகக்காரர் அன்னமிட்ட வீட்டுக்குக் கன்னம் வைக்கும் சதிக்காரர் செய் நன்றி மறந்தோர் - பொய்ச்சாட்சி சொல் வோர் பாலகரைப் பாவையரைப் பாற்பசுவைக் கொன்றவர்கள்· ஆகிய வர்கட்கு முத்தையள்ளி எறிவாயெனக் கூறினர்,

உடனே கும்பத்து மாரியம்மை எழு பொதி முத்தை யளந்து தேரிலிட்டுப் பொற்குடத்தில் நீருமெடுத்துக்கொண்டு வேப்பிலை கை யிற்கொண்டு வாள்பிடித்த சக்தி கணங்கள் தேரிழுக்கவும், காளி வடம் பிடிக்கவும், காடேறி உடன்வரவும், வீரபத்திரர் முன்நடக்கவும் புறப் பட்டார். இந்த நேரத்தில் தேவுக்கள், இருடிகள் அம்மையின் பாதத் தில் விழ்ந்து தரிசித்தார்கள், இந்திரனின் தலைநகராகிய அமராவதியை அலங்கரிக்க எண்ணி வாழை கரும்புகள் நாட்டி, மகர தோரணங்கள் கட்டி நிறைகும்பங்கள் வைத்து, தேவகன்னிகள் ஆலத்தியெடுக்க ஒழுங்குபண்ணி அம்மையின் வருகையை எதிர்பார்த்து நின்றனர்.

அமராவதியை அடைந்த அன்னைக்கு அளவில்லா வரவேற்பு களும் ஆலத்திகளும் நடந்தன. பின்னர் அமராவதியை விட்டுத் தேவி ஸ்ரீ மகா விஷ்ணு உறையும் வைகுந்தம் சென்றார். விட்டுணு கணங் களெல்லாம் அம்மையின் அடி வீழ்ந்துவணங்கினர். பின்னர் உல கைப்படைக்கும் பிரம்மலோகம் சென்றாளம்மை. பின் சப்தரிஷிகள் வசிக்கும் உலகம் சென்று பின் நவக்கிரகங்கள் வாழும் உலகையும் கண்டு அவர்களின் அஞ்சலியை ஏற்று அவர்கட்கருள் புரிந்து, தேவ தச்சனாகிய மயனை யழைத்துத் தான் கடலில் ஓடுவதற்கு ஓர்கப்பல் செய்து தரும்படி பணித்தார், மயனும் தேவியை அஞ்சலி செய்து கப்பல் செய்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயனின் கப்பலின் பெருமை

வருணன் மறை ஏராவாகவும் உருத்திரர்கள் வங்கதாகவும், ஏழுமுகில்கள் பலவகைகளாகவும் தாரகைகள் தளமாகவும் வயிரவர் பாய்த்தூணுகவும், பலகலைகள் கயிருகவும் நான்கு வேதங்கள் பாய்களாயும் கொண்டு கப்பலை ஸ்தாபித்தான்.

அக்கப்பலிலே மாரியம்மை பரிகலற் படைகள் சூழப் பதினெட்டு வகையான முத்துக்களை ஏற்றி சூரியனே, கப்பலோட்டியாகவும் நந்தி சுக்கான் பிடிக்கக் கப்பலோடியது. இவ்வாறு ஓடிய கப்பல் பெருமானின் திருவிளையாடலால் திசை மாறி ஓடியபின் அம்மையின் அருளால் கரையை யடைந்து அம்மை நிலத்தில் காலைவைத்துப் அன்பர்கள் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர். தம்மையன்புடன் வணங்கியவர்கட்கு அம்மை அருள் புரிந்தார்.

## மாரியம்மனும் பாண்டியனும்

நீலவிழிப் பாண்டியனின் கர்வத்தையடக்க விரும்பிய அம்மையார் அவனது கண்ணைக் குருடாக்க நினைத்தார். கும்பத்தினின்று சிவனை நினைத்து தவம் செய்தார், சிவன்தோன்றி உமக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்க அம்மை அப்பரை வணங்கிப் பெருமானே பாண்டியன் கர்வம் நீங்க அவன் கண்களையழிக்கவேண்டுமென்ருர். உடனே சிவன் அம்மையை மகமாரியாக மாற்றிப் பாண்டிய மன்னனின் நந்தவன மத்தியிலுள்ள மாமரத்தில் ஓர் கனியாகப் பிறக்க வரம் கொடுத்தார். அம்மை மாங்காயாயிருந்து ஓர் நாள் மன்னன் மனைவியோடு கலவி மயக்கத்திலிருக்கும்போது மாங்காய் கண்ணில் விழுந்து பால் பட்டுக் கபோதியானுன். (அதாவது குருடானுன்) பின் பழையபடி முத்து மாரியாக மாறிக் கும்பத்தினின்று அன்பர்க்கருள் புரிந்தார். கும்பத்தில் நின்று தவம் செய்தமையால் கும்பத்துமாரியென்றும், மாங்காயாக மாறியமையால் மகமாரியென்றும் முத்துக்களை அள்ளி எறிந்து விளையாடியமையால் முத்துமாரியென்றும் அன்பர்கள் அம்மையை அழைத்தனர்.

## கண்ணகியே மாரி

பரத்து வாசமுனியின் மாந்தோப்பிலுள்ள மாங்கனியில் தோன்றிய உமை கண்ணகி. இக்கண்ணகியை மாரியென்று சில ஆராய்வாளர் கூறுகின்றனர். அவர்கள் கூறும் காரணம் என்னவெனில் கண்ணகி பாண்டிய நாட்டைத் தனது முலை திருகி எரித்துச் சேர நாட்டில் விமானமார்கமாய் தேவா பூமழை சொரியவைகுந்தமடைந்தாள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று முதல் பாண்டிய, நாடு பசி பிணியாலும் மழையின்மையாலும் வருந்துவதாயிற்று. ஆயிரத்து எட்டுப் பொற்கொல்லரைக் காளிக்குப் பலிகொடுத்துப் பல வேள்விகள் செய்ததின் பலனாகக் கண்ணகியின் அருளால் மழை பெய்தது வளம் சுரந்தது, மாரி என்றால் மழை எனலாம். எனவே மாரி என்று கண்ணகியைக் கூறலாமென்று சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

*ரேணுகையே மாரி*

ஜமதக்கினி முனிவரின் மனைவி ரேணுகாதேவியைச் சேரநாட்டில் இன்றும் பத்தினித் தெய்வமாக வழிபடுகின்றனர். தற்போது மாரியம்மன் ஆலயங்களிலுள்ள சிலையின் தோற்றமும் ரேணுகையின் தோற்றமும் ஒரே தன்மையுடையதால் இம்மாரியம்மனே ரேணுகை யென்று மலையாளப் பூசகர் கூறுகின்றனர்.

இன்றும் சேர நாட்டில் ரேணுகாதேவியின் ஆலயமும் வழிபாடும் நிலவுகின்றது. எனவே உருவச்சிலையின் பண்பினை ஆராய்ந்த சமய வாதக்காரர் மாரியே ரேணுகையென்று கூறுகின்றனர். சுருங்கக் கூறின் உமாதேவியின் வணக்கமே சக்தி வணக்கமாகும்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாரியம்மன் சிந்து

சீரிலங்கு தென்கயிலை நாதாபங்கில் வாழுமருள்த்
தேவி சிகாமணி தவஞ்செய்ய நினைத்து
ஏரிலங்கு மக்கினியை ஈஸ்வரியாள் தான்வளர்த்து
ஏழ் கரகக் கும்பமொன்று தானிறுத்தியே
பாரிலங்கு பொன்னின் எழுத்தாணிரெண்டு மேலமைத்துப்
பாவைநல்லாள் பாதமதன் மேனிறுவியே
தாரிலங்கு கொன்றை துபடை நீரிலங்கு செஞ்சடைமேல்
தானணிந்த ஈசுவரன் தன்னைநினைந்து
ஏகபரன் பாதமதை நாளுமகலாதபரை
ஈஸ்வரனைப் போற்றிநிதம் செய்தவத்தினால்
போகமுற்ற பொனனுலகும் பூவுலகும் கீழுலகும்
பூவை தவத்தீச்சுடர் பொடித்தெழும்பியே
ஆகமிக வேகவதனுலிடைந்து வானவர்கள்
ஆதிசிவன் பாலபயமென்று விழவே
பாகமுற்றவன் பாதுயா போகவருள் செய்பரமன்
பாரத்து நுமக்குற்றதுயா சாற்றுமெனவே
தக்கனிட்ட சாபமதையக்கனமே போககவென்று
சந்திரனைச் செஞ்சடைமேல் தாங்கியணிந்தோய்
மிக்கவரப்பூணணிந்த செக்கர் திருமேனியனே
மேவினவுன் பாதமடைக்கலமென்றே
தொக்கவனல் மீதினின்று மிக்கதவஞ் செய்தருளும்
தோகைதவத் தக்கினியின் வேகமதனுல்
சிக்கியடியார்க்கடுமை செய்பரனே ஈண்டடைந்தோம்
சேருமடி யெங்கள் துயர் தீருமெனவே
ஆழிசுற்றும் பூவுலகம் மீளிபெற்று வாழ்கவென்று
ஆதிசிவன் தேவருக்கபயமளித்து
சூழிபெற்ற வெள்ளை ஐராவதத் தோனுதியர்க்கு
சுந்தரஞ்சேர் எந்தவிடை தானருளியே
சீதமுற்ற செங்கமலப் பாதமிரண்டுசி தன்னில்
சேர்த்துநிற்கும் நற்றவத்தைப் பார்க்கவினைந்து
போதமுற்று வென்றலைம் புலத்தவத்தர் சூழ்ந்துவர
பூதகணநாதர்கள் பொற்பாதம் வருட
நாதமுற்ற விஞ்சையர்கள் கீதமிசைபாடிவர
நாரதன் மகதிகொடு இராகமிசைப்ப
வேதமுற்ற மாய்ந்தமறை வேதியர்கள் ஆதிசொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுலகர் கற்பகப்பூ மாரிபொழிய
பச்சைநிற மாயனுடன பங்கையன்கை கொட்டிவர
பைந்தொடியார் கர்ப்பூரவாலாத்தியெடுக்க
நச்சரவப்பூணணிந்த ருத்திரகணம் வாழ்த்திவர
நந்தி பிரம்பாலொதுக்கி முந்திநடக்க
துச்சவுண காலமொடு சூரனையும் வென்றதிரள்
சுப்பிரமணியர் கணம் கோடி நடக்க
செக்கர் முகில்போலழகச் சக்திகணம் சூழ்ந்துவர
தேவர்பிரான் வெள்விடையின் மீதிலமர்ந்தே
சக்கமலைச் சாரல்தன்னில் மிக்கதவஞ் செய்துநிற்கும்
சக்தி தவத்துக்கரனுர் சித்தமிரங்கி
பக்கமதில் வந்துநிற்கப் பார்வதியாள் தானெழுந்து
பாதமதில் வீழ்ந்து சில தோத்திரஞ் சொல்வாள்

*விருத்தம்*

1. அண்ட பகிரண்ட புவனங்களாகி
அவற்றிலுறை சரமசரமனைத்து மாகி
மண்டலத்திலிருளகற்றும் சுடரதாகி
மறைநான்காய் இறையாகி வருணம் நான்காய்
எண்டிசையும் நிறைந்தவுயிர்க் குயிரதாகி
எழுகடலாய் எழுமுகிலாய் யாவுமாகி
முண்டகன் மாலறியாத ஞானமூர்த்தி
முத்துவர மடியவளுக்கருள் செய்வாயே

2. ஆதியந்தமாகி மறைப்பொருளதாகி
அகண்டபரிபூரணமாயனுதியாகி
நீதிதன்கு மெய்ஞான விளக்கதாகி
நித்தபரிபூரணமாய்ச் சித்துமாகி
சோதி செறியருட் கமலப் பாதம் போற்றி
துதிக்கறியா மானிடர்க்குத் துயரஞ் செய்து
வேதனை சேர் முத்து விளையாடுதற்கு
விடை தருவாய் கைலைமலை விமலனுரே,

*வேறு*

3. செல்வமான செகதல மெங்கனும்
சென்று சென்று செனித்திடும மானிடர்
அல்லலாற்றி யறம்பல குன்றவே
ஆழி சூழுலகத்தை வருத்தினுர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல பூமகள் பாரம் பொறுக்கலன்
வந்துமா ஒலக்கபய மென்றேதினுள்
புல்லர் பாவப்புலையர்கள் மாய்ந்திட
புத்தியாக நல் முத்தநுளையனே

*சிந்து*

பூலோக இலக்குமியின் பூபாரம் தீர்க்கவென்று
பூரண கும்பத் தினின்று தானிறங் கியே
சாலோக இரெட்சகரை சாயுச்சி காரணரை
சாஷ்டாங்கமாக நமஸ் காரம் பண்ணவே
பாலாழி நஞ்சையுண்ட பண்ணவனக மகிழ்ந்து
பார்வதிக்கு முத்துவரம் தானருளியே
மேலான முத்துமக மாரியெனவேயழைத்து
மேதினியிற் சென்று விளையாடுமெனவே
நாம கரணமிட்டு நல்விடையும் தான் கொடுக்க
நாகமணிப் பூணணிந்த தோலகமகிழ்ந்து
காலாழிப் பீலி துள்ளக் கைவளைகள் சோதிவிட
கண்டச்சமுத்துவடம் நின்று வயங்க
பாலான ஏழுவகை முத்தளந்து தானெடுத்து
பாவை நல்லார் முத்தருமை காணவிரும்பி
மேலாசி யெவ்வுயிர்க்கும் மெய்யொளியாய் நின்ற சிவன்
மேனிதனில் மாரிமுத்து வீசிவிடவே
ஏகாம்பரக் கடவுள் தேகமதிற் பட்டமுத்து
ஏக வடவைக் கனலாய் நின்றெரியவே
தாகபிணி சேரவுடல் நோக வதனுலிடைந்து
தத்தளிக்கும் தன்மைதனைச் சக்தியுணர்ந்து
வேலவனை ஐங்கரனை மேன்மையுடன் பெற்றெடுத்த
வெள்ளிமலை நாதர்துயர் தீர்க்க நினைந்து
பாலொளியை வீசுதிருநீறணிந்து சூடிறங்கி
பத்திரத்தினுல் கோர முத்துமிறக்கி
வார்சடையிற் கங்கைசெறி வானவன்தன்மேனிதனில்
மாரிமுத்தின் அக்கினியை வாங்கிவிடவே
பாருலகனைத்தினுக்கு ஒருருவாய் நின்றதிரு
பார்த்திபனுர் மெய்த்துயரம் தீர்த்தபிறகு
இருநாழி நெல்லலந்து ஏழுலகுந்தான்கொடுத்த
ஈஸ்பரியே முத்துமகமாரியம்மனே
கருமாயன் தங்கையரே காரணசவுந்தரியே
காசினியில் முத்துவரம் நாமருளினேம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருமார்பில் முத்தையள்ளி பாராமலேயெறிந்தாய்
பட்டமுத்துச் செய்மருத்தம் தாங்கவரிது
தரைமீது மானிடர்க்குத் தானுமிந்த முத்தெறிந்தால்
தாங்க அரிது தாங்க அரிது பூங்குழல் பிறையே
வரைபோலும் கொங்கையினனே மாலிமையன் புத்திரியே
மானிடர்க்கு முத்தெறியும் வண்ணமுரைப்
பரையே பராபரியே பாகமென்பேன் சொல்லியரே
பத்தினியே எந்தனுக்காய்ச் சித்தமிரங்கி
நிரையாய்த் தவமிருப்போர் நித்தியமும் பூசைசெய்வோர்
நீதி தவறுதுலகம் ஆழுமரசர்
பரைபாதம் பூசைசெய்வோர் பக்தியுடனே துதிப்போர்
பாலகர் விருத்தகராய் மேவியிருப்போர்
கரைகாணுச் சைவமறை கற்றுணர்ந்த அந்தணர்கள்
கற்புநெறியே நடக்கும் பதத்தினிப் பெண்டிர்
விரைவாய்ச் சதாசிவத்தை வேண்டியடை ஞானிகட்கும்
மின்வனையாய் முத்துவிளையாடல் தவிர்ப்பாய்
சதிகேடர் துர்ச்சனர்கள் சண்டாளர் பாதகர்க்கும்
தாங்காத முத்தையள்ளி யோங்கிஎறிவாய்
துட்டர் கபடருக்கும் துன்மதிசூழ் வஞ்சகர்க்கும்
தோகையரே தீயமுத்தை வாரியெறிவாய்
தவகேடர் தங்களுக்கும் தாட்சணியமற்றவர்க்கும்
தாங்கரிய முத்தையள்ளி சாக எறிவாய்
துட்டர் கபடருக்கும் துன்மதிசூழ் வஞ்சகர்க்கும்
தோகையரே தீயமுத்தை வாரியெறிவாய்
வட்டிக்கு வட்டியிட்டு வாங்கு மாகபாவிகட்கு
மாற்றரிய முத்தையள்ளித் தூற்றிவிடுவாய்
ஒட்டிநின்று கோளுரைக்கும் ஊர்க்கலகக்காரருக்கும்
ஊழையிட்ட கூழைமுத்தை ஊற்றிவிடுவாய்
பத்தினியை உத்தமியைப் பண்புகெடப் பேசினோர்க்கு
பாலநிறைந்த முத்துக்களை வீசியெறிவாய்
வைத்த பொருள் கொள்ளையிட்டு மாறுசொல்லும் பாவிகட்கு
மாரிகையில் முத்தெடுத்துப் பாரிலெறிவாய்
கொண்ட மனையாளிருக்கக் கூத்திமனை செல்பவர்க்கு
மாரிகையில் முத்தையள்ளி வீசியெறிவாய்
பாலகரைப் பாவையரைப் பாற்சுவைக் கொன்றவர்க்கு
பார நெருப்பான முத்தை வாரியெறிவாய்
வாலை புவனேஸ்வரியே மாரிமுத்தே நாயகமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலத்தில் முத்துவரம் யாவு மளித்தோம்
பூவுலகமீது சென்று மல்லர்களைச் சங்கரித்துப்
பூபாரம்தீருமென்று நாதர் மறைந்தார்

*விருத்தம்*

சீர்மேவு மலையரசன் பெற்ற பாவை
சிவபரனை மனதிலுன்னித் தவமே செய்து
பார்மீது செல்லமுத்து வரமும் வாங்கி
படிபரவும் மாரியவதாரங் கொண்டு
கார்மேவு தனது சுவாசத்தால் யாருங்
கான நவ கோடி சத்தி தனை யுண்டாக்கி
ஊர் தோறும் முத்து விளையாட வெண்ணி
ஒள்ளிய பொற் தேரேறிப் புறப்பட்டாளே

*சிந்து*

ஏழு லோதி முத்தையளங் தீஸ்பரியாள் தேரிவிட்டு
ஏகபரை பொற்கரக நீருமெடுத்தாள்
பொற்கரக நீருமெடுத்தாள் பொற்பிரப்பங் கோலெடுத்தாள்
பொன்னனையாள் வேப்பிலையை கையிற் பிடித்தாள்
வேப்பிலையைக் கைப்பிடித்தாள் வெண்ணீற்றுப்பையெ
மெல்லி நன்னுள கண்டசர மாலையெடுத்தாள் [டுத்தாள்
ஆர்ப்பரிக்கும் பொன்னுடுக்கை தார்பபரியமாயெடுததாள்
ஆரும் நடக்க விடை தானருளினுள்
வாள்பிடித்த சகதிகனம் தோழ் கொடுத்துத் தேரிளுக்க
மாரியம்மன் முத்து ரதம் ஏறி நடந்தாள்
காளி வடம் பிடிக்க காடேறி தேரிளுக்க
கன்னி நன்னாள் தேர் செலுத்தி முன்னே நடந்தாள்
நீலி வடம் பிடிக்க நீல கண்டிதேரிழுக்க
நேரிழையாள் தேர் செலுத்தி முன்னே நடந்தாள்
கூனிவடம் பிடிக்கக் கோமாட்டி தேரிழுக்க
கோதைநல்லாள் முத்துரதம் ஏறிநடந்தாள்
வீரகணம் பின்னடக்க வீரபத்திர முன்னடக்க
மின்னனையாள் முத்துரதம் ஏறிநடந்தாள்
காளிகனம் பின்னடக்க கார்வடுகர் முன்னடக்க
காமாட்சி தேர்செலுத்தி முன்னே நடந்தாள்
குருநாத சுவாமியுடன் கோடிபடை பின்னடக்க
கொப்பனையாள் முத்துரதம் ஏறி நடந்தாள்
வெள்ளிமலை தன்னைவிட்டு வீரமுத்து மாரியம்மன்
வேலவர் உறைபதியை மேவி நடந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பதியில் வாழுமுயர் அண்டர் முனிவோர்களெல்லாம்
ஆயிழையைக் காணஎதிர் தேடிவருவார்
தமராரும் முத்துக்களைச் சந்தியெங்கும் சிந்திடுவார்
தங்கரெத்தின மாலைகளைத் தொங்கவிடுவார்
செம்பவளக்கால் நிறுத்திச் சித்திரப் பந்தலமைத்து
தேன்கதலி வான்கரும்பு தேடிநிரைப்பார்
வம்புசெறி சந்தனக் குளம்பு கொண்டு வீசிடுவார்
மாமகர தோரணங்கள் கட்டி நிரைப்பார்
குங்குமத்தினால் மெழுகிக் குத்துவிளக்கேற்றிடுவார்
கோலவரிப் பட்டுக்கள் மேற்கட்டிடுவார்
செங்கமலப் பூவிறைத்து தெண்டனிட்டு முன்வருவார்
தெய்வகன்னிமார்கள் எதிர்காண வருவார்
நாழிநெல்லுக் கொட்டிடுவார் பூரண கும்பம் நிரைப்பார்
காரியர்கள் கர்ப்பூரவாலத்தி யெடுப்பார்
தாழில் மலர் சிந்திடுவார் ஊழியங்கள் செய்திடுவார்
தாயே சரணமென்று போற்றி செய்குவார்
பாளைகொண்டு வீசிடுவார் பாலாஞ்சனமெடுப்பார்
பாதமதில் வீழ்ந்து நமஸ்கார'பிடுவார்
பூகமடல் கீறிடுவார் பூவாலலங்கரிப்பார்
பொன்னனைய மாலைகளைச் சுற்றியெறிவார்
நாகமணிக்கோவைகளை நாற்றிசையும் கட்டிடுவார்
நாயகியே தஞ்சமென்று பாதம் பிடிப்பார்
வாலகுமரேசா வந்து மாதாவை தெண்டனிட்டு
மாமலாப்பாதம் பணிந்து பூசைபண்ணவே
ஞானமதை யாழுமன்னை பாலனையுறவணைத்து
நாள்தோறும் வாழ்கவென்று நல்விடைநல்கி
வாழுமமராபதியை மங்கைநல்லாற் விட்டகன்று
வைகுந்தம் காணவென்று தேடிடைந்தாள்
மேகவர்ணன் நாட்டிலுள்ள வீட்டுனு கணங்களெல்லாம்
மெல்லியரைக் காணவெதிர் தேடிவருவார்
தாகபிணி சஞ்சலங்கோதாரி நயல்தீரவென்றும்
தாபரித்து ஆழும் மகமாரியெனவே
மேளமுகில் மேனியன்தன் மேதினியில் வாழ்பவர்க்கு
வீரமுத்து மாரி விடைதானருளியே
பூமிலுறை நாமகளார் வாழ்பிரம்மலோகத்தைப்
பொற்கொடியாள் கண்டு மகிழ்வாகி நடந்து
தாவுதுருவன் பதத்தைத் தையல் நல்லாள் தான்நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்தரிஷி வாழ்புவியை விட்டு நடந்து
ஓதுசனி வாழ்புவியை உத்தமியாள் தான் கடந்து
உம்பர்குரு வாழ் உலகம் பார்த்து மகிழ்ந்து
மேவு செவ்வாய் வாழுலகம் தாபீவளம பார்த்து வந்து
மெல்லி நல்லாள் அவ்விடம் விட்டேகும வழியில்
நாவில் மறை கூறிய சுரேசர்குரு வாழ்ந்திருக்கும்
நற்பதியின் அற்புதத்தைக் கண்டு மகிழ்ந்து
தாவிவரும் பாதைதன்னில் மேவுபுதன் வாழுலகம்
தாரகையுலகமும் கண்டேகும் வழியில்
காவிமலர்போல் வதனக் காரிபடை சூழ்ந்து வர
கன்னிநல்லாள் சந்தபதி தன்னையகன்று
ஈசான லோகமதை ஏந்திழையாள் தான் கடந்து
இன்புறு குபேரநகர் தன்னையகன்று
நீசர் வருணர்பதம் நீழ்நிருதி வாழ்புவனம்
நேரிழையாள் வாயுநகர் தானுமகன்று
செஸ்கிரக அக்சினி செறின் திருக்கும் லோகமதை
தேன் மொழியாள் கண்டு மகிழ்வாள் நடந்து
பொங்குபுகழ் சேர்வனம எங்கணுங் கண்டாதீ சக்தி
பொன்னுலகம் வந்து வழம பாக்குமளவில்
கங்கையெல்லாம் தெய்வ கங்கை மங்கையரெல்லாம்
காராம் பசுக்களெல்லாம் காமதேனுக்கள் [மரப்பை
பொகுமணி பாறையெங்கும் பொன்னினெழுத்தாய் விளங்க
பூரணமாய் வாழ்திருப்பார் தேவகணங்கள்
கொந்து கமழ் சோலையெங்கும் சந்தணமும் கற்பகமும்
கோல மதயானை ஐராவதமுமாம்
பொங்குறவர் பொன்னுலகம் தங்கியரசாழுமன்னர்
போகமுயரிந்திரனுர் வந்து பணிந்து
கங்கைபெறு வாழ்வு நல்கி தாபரிக்க வேணுமென்று
தாமரை பொறபாதமதில் வீழ்ந்து தொழவே
மங்கையர்க்கெல்லாம் அரசாய் வாழ்ந்திருக்கும் ஆதிசக்தி
மாதவர்க்கு நல்கிவிடையேகும் வழியில்
எங்குமிருள் தானகற்றி ஏகவொளியாய் விளங்கும்
ஏழ்பரித்தேர் சூரியன்தன் லோகமகன்று
துங்கரெத்தின் மாமௌலி சூடிய மன் வாழ்பதத்தை
தோகை நல்லால் கண்டுலகம் போகும் வழியில்
பங்கமுற்று ஆழ்கடலை துங்கமுத்து மாரிகண்டு
யாருலகம் செல்வதற்கோர் கப்பலியற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதச்சனும் மயனைத்தேடியழைத்தே வந்து
செப்பமுறுங் கப்பல செய்ய உத்தரவிட்டான்
மந்திரத்தை யுச்சரித்து யந்திரங்கள் தானமைத்து
சுந்தரமதான கப்பலொன்றையமைத்து
எந்தைபரமேஸ்பரியாள் விந்தையுடன் செல்வதற்கு
ஏற்றபல சாதனங்கள் தானுமமைத்தார்

## விருத்தம்

1. சீரோங்கு வருணன் மறை ஏராவாக
சித்திரஞ்சேர் உருத்திரர்கள் வங்கதாக
காரோங்கு மெழுமுகில்கள் பலகையாக
கதிர்பரவும் தாரகைகள் தனமதாக
பாரோங்குவயிரவர் பாய்மணித்தூணாக
பலகலைகள் கப்பலுக்குக் கயிறதாக
தாரோங்கு சதுர்மறைகள் பாய்களாக
தாபித்தார் கப்பலொன்று நேமித்தானே

2. உச்சிதஞ்சேர் தெய்வ தச்சன் மகிழ்ச்சியோங்க
உவந்துமேமணி வயிரச்சுக்கானிமாட்டி
பச்சைவயிடூரியத்தால் பறுவான்தைத்து
பாய்மரத்தில் பவளத்தால் பருமல் பூட்டி
நச்சரவமணிகளினால் கம்பி சேர்த்து
நவக்கிரகமனைத்தையும் பாய்க்கொடிகளாக்கி
லச்சிரமாளிகையமைத்த கப்பலொன்றை
வரவிட்டான் மாரியம்மன் எதிர்விட்டானே

## கப்பற் பாட்டு

1. சீரிலங்கு மாதிசக்தி — தச்சன்
செய்தகப்பல் பார்த்துவந்து
தாரிலங்கு தச்சனுக்கு — அம்மன்
தங்கமணி பணியளித்து
கூரிலங்கு விழி மடவாள் — அம்மன்
கொடியமுத்துப் பொதிசுமத்தி
பாரிலங்கு பரிகலங்கள் — யாரும்
பயணம்வர விடைகொடுத்தாள்
விடைகொடுத்தே பயணபேளகை முழங்க
வெற்றிமுரசதிரவே விதுருகள் பிடித்து
படைபிடித்தே கோடி பரிகலஞ்சூழ
பதினெட்டு வகையான முத்துகளுமேற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபிடித்தே பரிதி மாலுமியதாக
நந்தி சுக்கானியாய் வந்துபடகேறி
தடையற்ற தண்டயல்களாசுகளமைத்து
தையல் நல்லாள் கப்பல் பாயெடுத்ததுவே.

2. கல்லுவைக்கக் கலாசுகளும் — அம்மன்
கடல் பார்க்க மாலுமியும்
கல்லெடுத்துப் படகிலிட்டு — அம்மன்
கனகமணிக் கொடியிழுத்து
வல்லபஞ் சோதி சக்தி — அம்மன்
வடபறுவான் பாய்விரித்து
கல்லணைய வடமரத்தில் — அம்மன்
கால் சவுரி பாய்விரித்து
சில்லணைய முன்னணியில் — சக்தி
சீப்பெனும் பாய் சேர்த்திழுத்து
சீபபு முதலான பல பாய்களை ரித்து
சித்திரக் கப்பலது திசை மாறி ஓடி
தார்ப்பரியமான பிற வாழியது தாண்டி
தங்கமலை பவளமலை பச்சைமலை கண்டு
நாப்பதும் பாற்கடல் கடந்து மகமாரி
நாகமலை விந்தமலை கண்டு மகிழ் வாகி
பூப்படுங் குழல் சோர முத்துமகமாரி
பொன்னணைப கப்பல் கடல் தண்ணிலோடியதே

3. ஓடிவரும் வடகடலைச் ... சத்தி
ஒரு நொடியில் தான் கடந்து
நீடியதோர் தென் கடலில் அம்மன்
நீர் வளங்கள் பார்க்க லுற்ருள்
கூடிவரும் பரிகலங்கள் எல்லாம்
கூக்குரலிட்டார்ப் பரிக்க
கூடிவரும் கடலோடி — அம்மன்
சாமிபதி தேடலுற்ருள்
தேடியே வடகாசி மாநகர் கடந்து
தெய்வமணி கன்னிகைத் தீர்த்த மதிலாடி
பாடியே சிவ பூசை வழுவாதி யற்றி
பால் சிறபான வெண்ணீற தணிந்து
சேடிமார் சூழவே கப்பலிலேறி
சேங்கமல மாய நகர் கண்டு மகிழ்வாகி
ஓடியே மாயாபுரந்தன்னில் வந்து
உலகநாயகி கப்பல் கல்லுவைததது வே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

4. கல்லு வைத்துக் கரையில் வந்து — அம்மன்
கனகமணி பணியணிந்து
சொல்லிலங்கு மாதி சக்தி — அம்மன்
சூழவரச் சேடியர்கள்
மல்விலங்கு பரிகலங்கள் — அம்மன்
வாசமலர்ப்பதம் பணிய
வில்லிலங்கும் வழநகரை — அம்மன்
விருப்பமுடன் பார்த்துகந்து
செல்லநெடுநகர் வாழ்வோர் — யாரும்
தேவிபதம் தாழ்பணிய
வல்ல நெடுமா மாயன் — தங்கை
வரங்கொடுத்தரளனைவருக்கும்
வரங்கொடுத் தவ்வடியவரை யனுப்பிப்பின்னர்
வருமாயாபுரத்தைவிட்டு வரிசையோடு
உரமிகுந்த படைகூட்டிய பரனையுன்னி
உம்பர்களுமதிசயிக்கப் படகிலேறி
கரைமிகுந்த கரியநிற வாழிதாண்டி
கன்னிவரும்போது வழிமதுரைகாண
தரியவர்கள் வெருவ அம்மன் கரையில்வந்து
சார்ந்து மதுரைப் பதிமேலிறங்கி வந்து சென்றான்.

*சிந்து*

ஆழிசுற்றும் பூவுலகம் பேறுபெற்று வாழவருள்
அன்னை மதுரைப் பதியைக்கண்டு நடந்து
வாரிறுக்குங் கொங்கை மின்னார் தேவியிருபாலும் வர
வானவர்கள் கற்பகப் பூமாரி சொரிய
துட்டர் குலஞ்சங்கரித்து சிட்டபரிபாலனம்செய்
தோகை நல்லாள் வீதிவழியாக நடந்தாள்
கூன்பிறை முடித்த சடைக் கூத்தரிடம் பாலிலுறை
கோதையரும் வேதியர்தன் வீதிவரவே
நக்கனருள் பெற்றபரை மிக்கவரவுக்குரியார்
நல்வரவுகண்டு புதுக்கோலமிடுவார்
பூரணகும்பம் நிரைப்பார் பொன்னுலலங்கரிப்பார்
பூவைநல்லார் கற்பூரவாலத்தியெடுப்பார்
வாரணியுங் கொங்கைமின்னூர் மாரியம்மன் முன்புவந்து
மாமலர்ப்பாதம் பணிந்து பூசைபுரிவார்
காரண சவுந்தரியே நாரணத் தங்கையரே
காத்து இரட்சித்தாழுமென்று போற்றிசெய்குவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதினியெல்லாம் நிறைந்த சோதி முத்துமாரியம்மன்
நீலவிழிப் பாண்டியனைக் கண்டு வெகுண்டு
காதில் மகிடா சூரனை வாதில் வென்ற பூரணியாள்
காமாட்சி தம் மனதில் கோபம் மிகுந்து
மேதினியிற் பாண்டியன் தன் மெய் விழியைத் தான் மறைக்க
வேண்டுமென்று வெள்ளிமலை மேவி நடந்தாள்
வெள்ளிமலை நாதரிடம் ஸ்ரீசக்தி வந்து நின்று
மெய்ப்பதம் பணிந்துலகவற்புதஞ் சொல்லாள்
வள்ளல் மதிதன் மரபில் வந்த தமிழ் மாறனுக்கு
வானுதலிற் கண் கிடைத்த மாதபத்தினால்
வெள்ளிடையின் மீதுவந்த பேதியரே நாணமுற்றேன்
மெய் விழி மறைக்கவருள் செய்யுமெனவே
ஐயனும் வந்து தபஞ் செய்யுமெனவே மறைந்தார்
ஆதிசக்தி நற்றவத்துக்கென்று நடந்தார்.

*விருத்தம்*

அருமறையின் பொருளாகி ஞானமாகி
அனைத்துயிர்க்குயிராகி அமலமாகி
வரமருளும் செஞ்சுடரை மனதிற்கொண்டு
மகமாரி தவவேட வடிவந்தாங்கி
மரவுரியும் சடை முடியும் தரித்தேவேத
மறைநவிலும் செபமாலை கரத்திலேந்தி
பரவரிய கைலை மலைச்சாரல் சேர்ந்து
பார்வதியும் தவநெறியைத் தலைமேற் கொண்டாள்
வித்தகஞ்சேர் மலையரசன் பெற்ற பாவை
வீரகம்பத்திலிந்தபஞ்செய்யுவாருளில்
அத்தனெதிர் தோன்றாத தன்மையாலே
அதிசயித்து மிகவாடி அல்லல் கூர்ந்து
சித்தமதில் நிறைந்த பரஞ்சுடரே போற்றி
சிவாயநம எனும் எழுத்தைத் திடமாயுண்ணி
பத்தினியாம் மாரியம்மன் அறிவாய் நின்ற
பழமறையின் பொருளை யுன்னிப் பாடுவானே

*சிந்து*

ஓங்காரத்துட் பொருளே ஓம்நமசிவாயமென்னும்
உத்தமரே பொற்பதங்கள் போற்றினேனையா
நீங்காத யோகநிலை நேசமுடனே புரிந்தேன்
நீலகண்டா பொற்பதந்தா மூமையனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்காத வீரசயம்பந்தன்னில் தவசிருந்தேன்
சாமிவந்து பார்த்து வரந்தந்தருளையா
அண்டமனைத்துங் கடந்த அத்தாபதம்பணிந்தேன்
ஆனவரமீய மனந்தானருளையா
பண்டுமறலிக் குதைத்த பாதாபதம் பணிந்தேன்
பார்த்துவரமே கொடுத்துக் காத்தருளையா
விண்டுமறை வேதியனும் கண்டறியாப் பாதமுடி
விண்ணவனே தன்னருளைப் பண்ணியருள்வாய்
தெண்டிரையில் வந்த நஞ்சை உண்டுயர்காத்த
தேவாதிருவுளங் கொண்டருமையனே
தேவாதி தேவனென்று செப்புமடியார்க்கு
சேரும் வினை தீர்த்தருளும் ஆதி அபயம்
பாவாணர் சாற்றுபுகழ் பாத்திரனே தோத்திரஞ்செய்
பத்தினியாட் கொத்தவரம் மெத்தவருள்வாய்
மூவாமுழுமறைவின் முப்பொருளே எம்பொருட்டு
முன்னவனே பொன்னடிகள் தன்னிலபயம்
பூவார் வடநிழலில் போந்து மறையந்தனர்க்கு
போதநிலை காட்டியருள் புண்ணியாபோற்றி
வேளையபாண்டியன்தன் மெய்விழியையும் தான்மறைத்து
வீரசொர்க்கம் சேர்க்க விடைதாருமையா
காளமுகில்போல் மிடற்றுக் காவலனே காருமையா
கங்கை முடியாய் பதந்தந்தாளுமையனே
என்றிரங்கியன்னைநின்று ஈசனருளவேண்டுமெல்லை
ஏந்து மழுமான்தரித்த ஏகனறிந்து
துன்று விடையேறி வந்து தோகை முன்பு தோன்றிநின்று
துய்யதிரு மேனியருட் காட்சி நல்கியே
பண்டுதமிழ் மாறன்னுதல் கொண்ட விழிதானழிக்
பாலுடைய மாவில் வடுவாகவுதித்து
கண்டு கனி கொய்திடவே அண்டிவரும் பாண்டியனின்
கண்ணுதலிற் பால தெளித்துன் எண்ணம் முடிப்பாய்
நீலவிழிப் பாண்டியனின் நேர்விழியைத்தான் மறைத்து
கீழ் புவிக்கு வாழ்வு நல்கி மீழ் கெனச் சொன்னூர்,

### விருத்தம்

ஐயனது திருவருளாலாதி சக்தி
அம்புவிகளனைத்துஞ் சென்றனலை மாற்றி
வெய்ய வெப்புக கோதாரி யனைத்தும் மாற்றி
வேள்வி செய்வோர்களுக்குப் புரிந்து வினைகள் மாற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகத்தில் தமைத் துதிக்கும் அடியார் தங்கள்
மனங்குளிர வரமுதவி மகிழ்ச்சி கூர்ந்து
தெய்வ மக மாரியம்மன் கும்பமேறி
திருமனது குளிர்ந்திருந்தார் தினமும் தானே
அந்தி சந்தியுனது மலரடியை யுன்னி
அடைக்கலமென்றே துதிக்கும் அடியார் தங்கள்
சிந்தை நொந்து வருந்தாமல் உயிர் சோராமல்
தீயபிணி வாராமற் சிறுமை நீக்கி
வந்த வெப்புக் கோதரரி யனைத்தும் மாற்றி
வையகமெல்லாங் குளிர மகிழ்ச்சி யோங்க
கையகங் கொண்டுன்னை ஏத்துகின்றோம்
தரணியில் அறம் வளர்க்கும தருமத்தரயே
த்ாயாசித் தரும நெறி விளக்கதாகி
பேயாகிப் பிறம்பாகி ஞானமாகி
தாவரமாய்ச் சராசரங்கட்கு யிரதாகி
பேரின்ப வீடதற்கோர் உறையதாகி
சேயாகிச் செக மெங்கு மன்மதாகி
சேவை செய்யுமடியவர்க் கெளியராகி
தாயாகி வரம் கொடுக்கும் தருமத்தாயே
தெண்டிரைசூழ் புவியோருக்கருள் செய்வாயே.

தேவி துணை

*குறிப்பு:* எமது அடுத்த வெளியீடு
*கண்ணகி வழிபாடு* (ஆராய்ச்சித் தொகுப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அடுத்த வெளியீடுகள்

1. நாம் வணங்கும் கண்ணகி — சிலப்பதிகாரக் கண்ணகியா?
   (ஆராய்ச்சித் தொகுப்பு) — 50 சதம்

2. மட்டக்களப்பின் ஸ்ரீ மாமங்கப்பிள்ளையார் ஆலய வரலாறு—50 சதம்

3. உளநூல் மூலம் மாணவரைக் கற்பித்தல் — 3 ரூபா
   (ஆசிரிய மாணவர்க்கும் ஆசிரியர்களுக்கும்)

4. இராவணன் மேலது நீறு (ஆராய்ச்சித் தொகுப்பு) — 50 சதம்

Printed by Peter Claver Ragel at St. Sebastian Press,
65, Lady Manning Drive Batticaloa and published by
Mr. S. Viswanathan Nadaraj of Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org